


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



## THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 3 ஏப்ரல் 2003 கனி 5

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## கிறிஸ்துவின் வசன மாத இதழின் பத்தாவது மாவட்ட வாசகர் கருத்தரங்கம்

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கத்திற்கு தூத்துக்குடி மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம்** :
- ❑ 1992 முதல் 2002 வரை வெளி வந்த இதழைக் குறித்து ஓர் ஆய்வு
- ❑ இந்த பத்தாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை
- ❑ எதிர் காலத்தில் நமது இதழில் இலக்கு

**நாள்** : **ஏப்ரல் 26-ம் தேதி சனிக்கிழமை, மாலை 4.00 மணி**

**இடம்** : **கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்,**
51/5A முனியசாமிபுரம் (ஏழுவீடு), தூத்துக்குடி – 3.

மேலும் விபரமறிய
**The Word of Christ,**
✆ (04543) 263278

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*
**P. வினோத்குமார்**
✆ 0461 - 2325976

*வாருங்கள்!* *பங்கு பெறுங்கள்!!* *அறிந்து கொள்ளுங்கள்!!!*

## FORM IV

1. Place of Publication: - Batlagundu
2. Periodicity of its Publication: - Monthly
3. Printer's Name : - V.D. Thankachan
4. Address : - Novelty Press, 3, Dhanappa Mudali Street, Madurai-625001.
5. Whether citizen of India: - Yes
6. Publisher's Name: - B. Arjunan
7. Address: - 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624202
8. Editor's Name: - B. Arjunan
9. Address: - 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624202

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sd
Signature of Publisher

Dated : 31.03.2003

## FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

திவேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் 3 ஏப்ரல் 2003 கனி 5

ஆசிரியவுரை

# உலக ரட்சகர்
## The Saviour of the world



உலகத்தில் எத்தனையோ இரட்சகர்கள் தோன்றினார்கள். பின்பு மறைந்தார்கள். ஆனால் உலகத்தை சிருஷ்டித்தவரும், தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவரும், முதலாம் நூற்றாண்டில் மனிதனோடு மனிதனாக வாழ்ந்தவரும், ஜனங்களுக்குள்ளே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் செய்தவருமாகிய இயேசு கிறிஸ்து மனிதனுடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்பு உயிர்த்தெழுந்து இன்றும் என்றும் சதாகாலமும் ஜீவிக்கிற வராயிருக்கிறார். இவரே உலக ரட்சகர்.

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் (இயேசு) மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" என்று பரிசுத்த வேதாகமத்தில் உள்ள எபிரெயர் 1:1,2ல் வாசிக்கின்றோம். சர்வத்தையும் உண்டாக்கின இயேசு கிறிஸ்து சர்வ வல்லவராக இருக்கிறார். உலகத்தில் முதலாவது உருவாக்கப்பட்ட குடும்பம் ஆதாமின் குடும்பம் என்பதை நாம் நன்கு அறிவோம். இக்குடும்பத்தை எதிராளியாகிய பிசாசு வஞ்சித்தான். அதனால் கர்த்தர் சாத்தானை சபித்து "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்றார் (ஆதி.3:15). தாம் உண்டாக்கின குடும்பத்தை, சாத்தான் வஞ்சித்த நாளிலே கர்த்தர் சாத்தானை நோக்கி; அவர் (இயேசு) உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை

நசுக்குவாய் என்றார். உலகம் உண்டான காலத்திலே, உலகத்தின் எதிராளியாகிய பிசாசை ஜெயித்து அவர் உன் தலையை நசுக்குவார் என்று தேவன் முன்னுரைத்தார். "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்" (எபி.2:14, 15). இயேசு மாம்சத்தில் நம்மைபோல வந்ததின் நோக்கம் மரணபயத்தில் அடிமையான நம்மை மீட்டு இரட்சிக்கவே என்பதை நாம் முதலாவது புரிந்து கொள்ள வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் போது தேவ தூதன் "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக். 2:10,11) என்று அறிவித்தான். முற்பிதாக்களின் காலத்தில் கர்த்தர் தாம் தெரிந்து கொண்ட ஜனங்களை மட்டும் இரட்சிக்க ரட்சகர்களை அக்கோத்திரங்களில் எழுப்பி வந்தார். அந்நாட்களில் "இஸ்ரவேல் புத்திரை இரட்சிக்கும்படி காலேபின் தம்பியான கேனாசுடைய குமாரனாகிய ஒத்தினியேல் என்னும் ஒரு ரட்சகனை அவர்களுக்கு எழும்பப் பண்ணினார்" (நியா.3:9). ஆனால் கிறிஸ்து பிறப்பின்போது எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்று தேவதூதன் சொன்னான். இச்செய்தி யூதர்களுக்கு மட்டுமா அல்லது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமா? எல்லா ஜனத்துக்கும் என்று பார்க்கின்றோம். காரணம் அவர் உலக இரட்சகர். இயேசுவின் சீஷர்களும் கூட இயேசுவைக் குறித்து சாட்சிபகரும்போது **"பிதாவானவர் குமாரனை (இயேசுவை) உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்"** (1 யோ.4:14) என்றார்கள்.

தீர்க்கதரிசிகள் இயேசுவை குறித்து சொல்லும்போது "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" (உபா. 18:15) என்று மோசே முன்னுரைத்தான். அந்தப்படியே "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" (ஏசா 7:14) என்று ஏசாயா தீர்க்கன் சொன்னான். சிமியோன் "அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து... புற ஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்" (லூக்.2:28-32). இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் இயேசுவை "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவா.1:29) என்றான். மேலும் "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வை

பண்ணுங்கள் என்றும், பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலானவைகள் செவ்வையாகும், கரடானவைகள் சமமாகும் என்றும், மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்றும், வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தில் எழுதியிருக்கிற பிரகாரம், அவன் யோர்தான் நதிக்கு அருகான தேசமெங்கும் போய், பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தான்" (லூக்.3:3-6). இன்று "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவா. 2:2).

உன்னதமான தேவனுக்கு ஊழியம் செய்த அநேக தீர்க்கதரிசிகள் உலகரட்சகர் இயேசுவைக்குறித்து உரைத்த தீர்க்கதரிசனங்கள் அந்தப்படியே நிறைவேறியிருக்க இன்று இரட்சிக்க மாட்டாத, மறுமொழி கொடுக்காத, நூதனமான தெய்வங்களை உண்டாக்கி அவைகளே நம்மை இரட்சிக்கும் என்றால் அது நம்மை இரட்சிக்குமா? மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்று சொன்ன தீர்க்கதரிசியின் வார்த்தைப்படியே இன்று உலகமெங்கும் உலகரட்சகர் இயேசு பிரசங்கிக்கப்பட்டு வருகிறார். இயேசுவின் பிறப்பு, மரணம், அடக்கம், உயிர்தெழுதல் ஒரு மூலையில் நடந்த சங்கதியல்ல உலகம் அறிந்த உண்மை. "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" (யோவா.1:10-12).

பிரியமான சகோதரனே சகோதரியே உலகத்தில் இருக்கிற நம்மையும் நம் குடும்பத்தையும் இரட்சிக்க வந்தவர் இயேசு. "திருடன் (பிசாசு) திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவா.10:10) என்கிறார். இன்று அவரை விசுவாசித்து அவரை ஏற்றுக் கொண்டால் அவரும் உம்மை ஏற்றுக் கொள்வார். நீ தேவனுடைய பிள்ளையாக மாறுவாய். "அநுக்கிரக காலத்திலே நான் உனக்கு செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" (2 கொ.6:2). மேலும் "நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" (யோவா.8:24) என்கிறார். இன்று நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள எது தடை? "எந்த ராஜாவும் தன் சேனையின் மிகுதியால் இரட்சிக்கப்படான்; சவுரியவானும் தன் பலத்தின் மிகுதியால் தப்பான். இரட்சிக்கிறதற்குக் குதிரை விருதா; அது தன் மிகுந்த வீரியத்தால் தப்புவியாது" (சங்.33:16, 17). சகல பாவங்களையும் நீக்கி நம்மை

இரட்சிக்க வல்லவர் இயேசு கிறிஸ்து ஒருவரே. அவரே தேவனால் முன் குறிக்கப்பட்டவர். "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்" (1 தீமோ.1:15) என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறான். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராத படியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட் பட்டாயிற்று" (யோவா.3:16-18).

ஆகையால் "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்" (எபி.2:4). "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்" (2 தெச. 1:7-8) என்று பவுல் தெசலோனிக்கே சபைக்கு எழுதுகிறார். இக்கடைசி காலத்தில் வாழ்கின்ற நமக்கு இது எச்சரிப்பாகவும் எழுதப்பட்டுள்ளது. இயேசுவானவர் மீண்டும் வருவார். பாவிகளை இரட்சிக்க அல்ல இரட்சிக்கப்பட்ட தம்முடைய மந்தையை மீட்கவும் மீட்டு பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுக்கவும் வருகிறார். அவருடைய வருகைக்கு முன் நீ அவரை ஏற்று அவருடைய மந்தையில் சேர்க்கப்பட பிரயாசப்படு. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12). கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் உங்களை இரட்சித்து, தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவாராக; அவருக்கே சதாகாலமும் மகிமை உண்டாவதாக. ஆமென்.




**மூன்றினிமித்தம் பூமி சஞ்சலப்படுகிறது**
**நான்கையும் அது தாங்கமாட்டாது**

1. அரசாளுகிற அடிமையினிமித்தமும்
2. போஜனத்தால் திருப்தியான மூடனினிமித்தமும்
3. பகைக்கப்படத்தக்கவளாயிருந்தும், புருஷனுக்கு வாழ்க்கைப்பட்ட ஸ்திரீயினிமித்தமும்
4. தன் நாச்சியாருக்குப் பதிலாக இல்லாளாகும் அடிமைப்பெண்ணினிமித்தமுமே.

நீதிமொழிகள் 30:21-23

# பேராபத்தை சந்தித்தல்
# Facing Disaster

- J.C. Choate



உலகத்தின் ஏதோ ஒரு இடத்தில் ஒவ்வொரு நாளும் சில பேராபத்துகள் ஏற்படுகின்றன. அவைகள் பூமி அதிர்ச்சிகள், வெள்ளங்கள், கடும்புயல்கள், சூறாவளிகள், சுழல்காற்றுகள், நெருப்புகள், பனி மற்றும் பனிக்கட்டி புயல்கள் மற்றும் வறட்சிகள் என பல வகைகளாகும். தீக்கொழுத்துதல், விபத்துக்கள் போன்ற மனிதனால் ஏற்படுகிறவைகளும் சில. பிறகு போர், வியாபாரம், தோல்விகள், விமானம், கார், பஸ் மற்றும் புகைவண்டி மோதல் போன்றவற்றால் ஏற்படுகின்ற துயரங்களும் உண்டு. மாரடைப்பு மற்றும் ஆழ்ந்த துக்கத்தின் விளைவால் ஏற்படுகின்ற இயற்கை மற்றும் செயற்கை மரணமும் உண்டு. உலகத்தில் நிறைந்து காணப்படுகிற இவ்வகையான காரியங்கள் நாம் நித்தியத்தைக் கழிக்க போகின்ற அடுத்த உலகத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தும்படிக்கு ஏன் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றதில்லை என்று ஒருவரை வியப்படையச் செய்கிறது. ஆயத்தமில்லாமல் தேவனை சந்திக்கும்படி இவ்வுலகத்தைவிட்டுச் செல்லுவது ஒரு ஆத்துமாவிற்கு மாபெரும் இழப்பும் துயரமுமாக இருக்கும்.

ஆனால் ஒரு பேராபத்தைச் சந்திக்கின்ற போது நீங்கள் என்ன செய்வீர்கள்? சில நேரங்களில் நீங்கள் அனுபவித்திருக்கிற கஷ்டம், குறிப்பாக உங்கள் குடும்பத்தாரை நீங்கள் இழந்திருக்கிற போது அது மரணத்தை விட மோசமாயிருக்கலாம். ஆனால் எந்த அளவில் உங்களுடைய வீடு, சொத்து அல்லது உங்களுடைய வியாபாரத்தில் நஷ்டம் அடைந்திருக்கிறீர்கள்? காரியங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், உங்களால் முடிந்த அளவிற்கு அவைகளை மீட்கும்படி முயற்சிப்பதற்கும், மீண்டும் அவைகளை கட்டுவதற்கும் எத்தனை சவால்கள்! இவ்விதமான பெரிய பொருள் இழப்புகளிலும், நிதி இழப்புகளிலும் உங்களுக்கு உதவிகளும், ஒத்தாசைகளும் ஏராளம் தேவை. நண்பர்களையும் அரசு உதவிகளையும் மற்றும் அவசரநிலையில் உதவும்படிக்கு தூரதேசத்திலிருந்து உதவுபவர்களையும் நீங்கள் நாடும் போது இவைகள் தேவைப்படலாம்.

தனிப்பட்ட விதத்தில் நீங்கள் எவ்வாறு இந்த பேராபத்துகளை மேற்கொள்ளுவீர்கள்? நீங்கள் இதை ஏற்றுகொண்டு அதை சரி செய்வதற்கும், உங்களுடைய வாழ்வையும், வீட்டையும், வியாபாரத்தையும் அல்லது நீங்கள்

எதையெல்லாம் இழந்திருக்கிறீர்களோ அதையெல்லாம் புதுப்பித்துக் கொள்ளுவதற்கும் முழுமூச்சாய் ஈடுபடுவீர்களா? அல்லது உங்களுக்கு நேரிட்டுள்ளது குறித்து ஆத்திரமடைந்து, கசப்படைந்து, கைவிட்டு, அதை உங்களை விட்டு விலக்கி விடுவீர்களா? இவைகளுக்கு மேலாக, நடைபெற்ற அனைத்திற்காகவும் தேவனை குற்றப்படுத்துவீர்களா? நம்புகிறேன், நீங்கள் தேவனை குற்றப்படுத்த மாட்டீர்கள், ஏனென்றால் தேவன் உங்களை தனியே பிரித்து கொண்டு வந்து வெள்ளம், தீ, சூறாவளி அல்லது உங்களை உங்கள் குடும்பத்தை அல்லது யாரோ ஒருவரை துன்பப்படுத்த வேறு சில இயற்கை சீற்றத்தை உங்களுக்கு அனுப்பவில்லை. இயற்கை விதிக்கேற்ப, இயற்கை மூலக்கூறுகள் குறிப்பிட்ட நிலைக்குட்படும்போது, கடும்புயல், பலத்த மழையினால் ஏற்படும் வெள்ளம், பனிப்புயல், பூமியதிர்ச்சி அல்லது வேறு காலநிலை மாற்றங்கள் பூமியில் ஏற்படுகின்றன என நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தேவனை தூஷிப்பதற்குப் பதிலாக, நீங்கள் காக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். நீங்கள் கஷ்டம் அனுபவித்திருக்கிறது போல, மற்றவர்களும் கூட, அனுபவித்திருக்கிறார்கள், இன்னும் எண்ணற்றோர் உங்களைக் காட்டிலும் அதிகமாய் துன்புற்று இருக்கிறார்கள். தேவனைத் தூஷிப்பதற்குப் பதிலாக, நீங்கள் உயிருடனிருப்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்தி மேற்கொண்டு முன்னேறுகிறவர்களாக இருக்க வேண்டும்.

இந்த தாங்கமுடியாத அனுபவம், தேவன் உங்களுக்கு எவ்வளவு தேவை என்பதை நினைப்பூட்டுகிற ஒன்றாகவும் நீங்கள் மறுரூபமாக்கப்படப் போகிற ஒரு நபர் என்ற எண்ணத்தை உங்கள் இருதயத்தில் உண்டாக்கக்கூடியதாகவும் நீங்கள் ஏற்கனவே ஒரு கிறிஸ்தவராக இருந்தால் அவருக்கு மிக ஆழமாக உங்களை அர்ப்பணிக்க கூடியவராகவும் உங்கள் ஜீவியத்திலிருந்து அவரை தள்ளியிருப்பீர்களென்றால் அவருடைய பிள்ளையாக மாறும்படிக்கு உறுதியான தீர்மானம் எடுக்கக் கூடியவராகவும் மாற்றட்டும். உங்களுடைய வேதாகமத்தை வாசித்து கற்றுக்கொண்டு, எப்போதும் சத்தியத்தை ஆராய்ந்து நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து (மாற்.16:15,16), ஒரு கிறிஸ்தவனாக (1 பேதுரு 4:16), கர்த்தருடைய சபையில் ஒரு அங்கத்தினராகவுமிருங்கள் (அப்.2:47) இதைச் செய்வதின் மூலம் நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளும் (ரோம.6:3,4) ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் இருக்கிற இடத்திலும் (எபே.1:3), அந்த ஆசீர்வாதங்களில் ஒன்றான தேவனுடைய பிள்ளையாய் இருப்பதையும் (கலா.3:24, 27), மற்றும் இப்படிப்பட்ட துன்ப நேரத்தில் தேவனுடைய உதவியைப் பெறும்படிக்கு அவரை நோக்கிக் கூப்பிடும் சிலாக்கியமாகிய இன்னொரு ஆசீர்வாதத்தையும் (1 யோவா.5:14,15) பெற்றுக் கொள்ளுவீர்கள். மேலும் விசுவாசமிக்க ஒரு கிறிஸ்தவனாயிருக்கையில், தேவன் தாமே உங்களோடு கூட இருப்பதாக அவர் வாக்களித்திருக்கிறார் (மத்.28:20).

ஆனால் ஒரு கிறிஸ்தவனாயிருந்த போதிலும், தேவன் சதாகாலமும் உங்களை தீங்கில்லாதபடிக்கு, சுகமாக காத்துக் கொள்ளுவேன் என்றும், நீங்கள் ஒரு போதும் சாக மாட்டீர்களென்றும் கூறவில்லை. நாம் இவ்வுலகில் இயற்கை நியதிகளுக்குக் கீழாக வாழ்ந்து குறிப்பிட்ட சூழலின் விளைவுகளை அறுவடை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் எதுவந்த போதிலும் நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக

சிறந்த நிலையில் சமாளிக்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் மரித்தாலும் கூட, ஒரு விசுவாசமிகுந்த கிறிஸ்தவனாக இருக்கையில் மாரடைப்பில்லாத, வேதனையில்லாத அல்லது இனி ஒருபோதும் இவ்வகையான பேராபத்தில்லாத இடமாகிய பரலோகத்தில் ஒரு வீட்டை பெறுவீர்களென்ற நிச்சயமுடையவர்களாயிருப்பீர்கள். தேவனுடைய பிள்ளைகள் முடிவிலே தாங்கள் ஒருபோதும் மரணமடையாத இடமாகிய ஒரு ஸ்தலத்தை, நித்தியமான ஆவிக்குரிய ஜெயத்தினை வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளனர்.

பயங்கரமான ஆபத்து நேரத்தில், உங்களுடைய அரசையும் சமுதாயத்தின் மக்களையும் மற்றும் உங்களுக்கு உதவியாக தூரதேசத்திலிருந்து வரக்கூடியதையும், உங்கள் மேல் அக்கரையுள்ளவர்கள் மூலம் தேவன் உங்களுக்கு உதவுகிறதையும் பெற்றிருப்பதில் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கலாம். முதல் முறையாக உங்களுடைய வாழ்வில் தாங்கமுடியாத இழப்பை அனுபவித்திருக்கலாம். மேலும் உதவக்கூடியவர்களும் உதவ விரும்புகிறவர்களும் உங்களுடைய அடைக்கலமாக இருக்கிறார்கள் என அறிந்திருக்கலாம். இவை உங்களுக்கு இந்த உலகம் நீங்கள் பயந்தபடி மிக மோசமானது அல்ல என்ற நம்பிக்கையைக் கொடுக்க முடியும். மேலும் மற்றவர்களுடைய உதவியின் மூலம் உண்மையாகவே உங்களை பராமரிக்கக் கூடிய கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களும், சகோதரிகளும் உண்டு எனவும், அவர்கள் தங்களுடைய அன்பை வார்த்தையினால் மட்டும் மல்ல கிரியையினால் காண்பித்திருக்கிறார்கள் என்றும் நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள்.

இன்னொரு நற்காரியம் என்னவென்றால், இந்த வகையான அனுபவங்களிலிருந்து நீங்கள் வருங்காலங்களில் இப்படிப்பட்ட கடுமையான அழிவையும் பேராபத்தையும் சந்திக்கின்ற மக்களுடைய தேவையில் அவர்களுக்கு உதவிட அதிக அளவில் உணர்வு மிக்கவர்களாகவும் இருப்பீர்கள்.



## தெரிந்து கொள்ளுங்கள்!

### கானாவூர்

- K.R.K. ரவி ஆசீர்


கலிலேயாவிலுள்ள இந்த ஊரிலே இயேசு ஞானஸ்நானம் பெற்றபின் செய்த முதலாம் அற்புதத்தின் காரணமாக இது கிறிஸ்தவர்களால் அடிக்கடி நினைவு கூறப்படும் ஒரு கிராமமாக இருக்கிறது. இதே ஊரில் மீண்டும் இயேசு வியாதியாயிருந்த ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனை சொஸ்தமாக்கினார் (யோவான் 4:46-54). இது நாத்தான் வேலுடைய சொந்த ஊராகவும் இருந்தது. கப்பர்நகூமுக்குச் சமீபமாக இந்த ஊர் இருந்தது. இது நாசரேத்துக்கு வடகிழக்கு திசையில் 4½ மைல் தூரத்தில் அமைந்திருந்தது என்று பாரம்பரியமாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது இந்த ஊர் கானா-எல்-ஜெலீல் என்று அழைக்கப்படுகிறது.

பெண்கள் பகுதி

# பரவசம் என்பது என்ன?

## What is Ecstasy?

Betty Burton Choate



**பரவசம் என்பது என்ன?**

இது தேவனோடுள்ள சமாதானத்திலும் பாதுகாப்பிலும் இருக்கின்ற ஒன்று, அகங்காரத்தில் அல்லது பெருமையில், ஒருவரிலுள்ள நம்பிக்கையில் அல்ல, மாறாக சாதாரணமாக தேவனில் பத்திரப்பட்டுள்ள ஒன்று.

இது நெடுங்காலமாக அவரோடே கூட வாழ்ந்திருக்கிற ஒன்று என நீ அறிவாய். அவருடைய பிரபஞ்சத்தை, அனுபவத்தின் மூலமாய் மட்டுமல்ல மாறாக அவருடைய வழிகள் உன்னுடையவைகளாகவும் இப்போது அவைகள் உனக்கு இயல்பானவையாகவும் மாறியிருக்கின்றதினால்.

இது அவருடைய புத்தகத்திலுள்ள அவருடைய நினைவுகளை ஈர்க்கும் நிலையை ஆராய்ந்திருக்கின்ற ஒன்று என நீ உன்னுடைய விசுவாசத்தின் அசைக்க முடியாத உண்மையினையும், எந்த ஒரு நபரின் வார்த்தைகள் அல்லது கிரியைகள் இதைத் தொடமுடியாது என்பதையும் அறிவாய்.

இது குறிப்பிட்ட சவால் புதியவையாயிருந்த போதிலும் கூட அதை எவ்வாறு சமாளிக்கலாம் என நீ அறிந்திருக்கிற போதுமான துயரத்தையும் வேதனையையும் சகித்துக் கொண்டிருப்பதாகும். தேவனிடத்தில் கிட்டிச் சேர்வாய் என கடந்த நடக்கையிலிருந்து நீ அறிவாய், ஒரு வேளை புரிந்து கொள்ளுவதில், ஒரு வேளை குழப்பத்தில், ஆனால் அவர் உன்னை விழாமல் தாங்கி எல்லாவற்றையும் சரி செய்வார் என நீ அறிந்து கிட்டிச் சேருவாய், கெட்டியாய் பிடிப்பாய், மேலும் காத்திருப்பாய்.

இது கீழ்ப்படிதல் ஒரு கடமையாய் இருந்த போது அல்லது ஒரு செயல் பயனளிக்கப் பட்ட போது சில நேரங்களில் சவாலுக்கிடையில் உறவு நிச்சய மில்லாமல் காணப்பட்ட போதும் மற்ற நேரங்களில் இது உன்னுடைய ஆத்துமாவில் வெறுமையாகக் காணப்பட்ட போதும் ஆவிக்குரிய குழந் தைப் பருவத்தின் சகாப்தம் என கடந்து சென்று கொண்டிருக்கின்ற ஒன்றாகும். இது முடிவிலே அவருடைய குழந்தையாய் மாற்றமடைந்திருக்கின்றது, பெயரில் அல்ல, செய்து நிறைவேற்ற செய்வதில், ஆனால் உன்னுடைய ஜீவியத்தின் ஒவ்வொரு அணுவிலும் இவ்வாறு நிலைத்திருக்கிற அவருடைய பிரசன்னத்தின் தொடர் இல்லா விஷயம் தெரிந்த நிலை ஒரு போதும் கற்பனை செய்யவும் கூடாததாயிருக்கிறது.

**ஒருவரிப்பாடம் 26ன் விடைகள்**

**E 1.B, 2.A, 3.B, 4.C, 5.A**

இது அறிந்திருக்கின்ற ஒன்று, வேதாகமத்திலுள்ள வசனங்களை வாசிப்பதி லிருந்து அல்ல, மாறாக உன் ஆத்துமாவின் உள்ளுணர்வுகளிலிருந்து அதாவது, "மரணமானாலும், ஜீவனானாலும், வேத தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானா லும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்பதாகும் (ரோமர் 8:38, 39).

– தமிழில் J. குளோரி அர்ஜுனன்

## பொது அறிவுக் களஞ்சியம்

**மாநில ஆளுநர்**

***இவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். இவர் மாநில முதலமைச்சரையும், சக அமைச்சர் களையும் நியமனம் செய்கிறார். இவர் 35 வயது நிரம்பிய இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். இவர் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினராக இருத்தல் கூடாது. இவர் அவசர ஆணை பிறப்பிக்கலாம். மேலும் சட்டசபைகளில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் இவர் ஒப்புதல் பெற்றே சட்டமாகும்.***

## இலவச அஞ்சல் வழி வேத பாடம்

# தேவன் இருக்கின்றாரா?

என்ற தலைப்பில் தமிழ், ஆங்கிலம் வழியாக

வேத பாடங்கள் உள்ளன.

இவை அறிவியல் ரீதியான வேதாகம பாடங்கள்.

விருப்பமுள்ளவர்கள் இன்றே தொடர்பு கொள்ளவும்

**D.S. Raj**
243, Sathy Church of Christ
Nehru Nagar Road
Sathy - 638 402
Erode Dt.,
✆ 04295-233276

*டி.எஸ். ராஜ்*
243, சத்தி கிறிஸ்துவின் சபை
நேரு நகர் ரோடு,
சத்தி - 638 402
ஈரோடு மாவட்டம்
✆ 04295-233276



## எமக்கு வந்த கடிதங்களில் சில...,

1. சகோ. இரா. எதிராசன், சுவி.,
ஆல்பர்ட் இல்லம், சங்ககிரி (அ.நி)
சேலம் மாவட்டம் - 637 301.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்
கி.பி.12.3.2003

கிறிஸ்துவின் அன்பான ஆசிரியர் அவர்களுக்கு மீட்பராய் இயேசு கிறிஸ்துவின் இனிய இன்ப நாமத்தில் வாழ்த்தி எழுதும் அன்பின் கடிதம். இம்மாத ஆசிரியருரை: ஓர் நல்ல செய்தி ஆனதோடு அதில் இருந்தே போட்டியிலும் ஒரு வினா எழுப்பிவிட்டீர். "தேவனுடைய வாக்குத்தத்தங்கள்" ஓர் அருமையான கவிதை அதை மொழி பெயர்த்த தோரணையும் மிக மிக அருமை. 'இனி ஒரு சாபமுமிராது' சிந்திக்க வைத்தது மட்டுமின்றி இனியும் சிந்தித்துக் கொண்டே இருக்கவும் சிந்தனைக்கோர் விருந்தாயிற்று.

அன்பான
சகோ. இரா. எதிராசன்.

2. கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரருக்கு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் அடியேன் இரு பெயர் முகவரி எழுதியதற்கு மன்னிப்பை கேட்டுகொள்கிறேன். அதற்காக நான் மிகவும் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறாது என தெரிவித்துக்கொள்கிறேன்.


அடியேனுக்காகவும் படிப்பிற்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள் நாலும் பத்திரிக்கை ஊழியத்திற்காகவும், உங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
கிறிஸ்துவுக்குள்
V. சரவணக்குமார்

# ஒரு வழி

## தேவனுடைய ஜனங்களைத் தேடுதல்

## SEARCHING OF GOD'S PEOPLE




### பாடம் 27

உங்களுடைய சமுதாயத்தில் நீங்கள் உண்மையான கிறிஸ்துவின் சபையை எவ்வாறு கண்டு கொள்ளலாம்? நீங்கள் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளபடியுள்ள சபையினை அடையாளப்படுத்துகின்ற விசேஷ குணாதிசயங்களை கண்டுபிடிப்பதன் மூலம் எளிதாகக் கண்டுகொள்ளலாம். இதுவே ஆதி கிறிஸ்தவர் களின் நடக்கை மற்றும் விசுவாசத்தை அடையாளங்காட்டுகின்றன. விசேஷ குணாதிசயங்களை நீங்கள் கண்டுகொள்ள உங்களுக்கு உதவுவதே இந்தப் பாடத்திட்டத்தினுடைய நோக்கமாயிருக்கின்றது.

நீங்கள் உணர்வடைய வேண்டும், எப்படியாகிலும் ஒரு சமயக்குழு புதிய ஏற்பாட்டினை அடையாளங்காட்டுகின்ற விசேஷகுணாதிசயங்களின் ஒன்று அல்லது இரண்டு காரியங்களை கற்பிக்கவும் நடைமுறைப்படுத்தவும் கூடும், ஆனால் இன்னும் உண்மையான சபையாக இருக்காது, ஏனென்றால் மனுஷர் உபதேசங்களை கூட்டவோ அல்லது குறைக்கவோ செய்கின்றனர். தேவன் நம்மில் எதிர்பார்க்கின்றவற்றில் ஏதோ ஒரு பகுதிக்கு மட்டும் கீழ்ப்படிவது தேவனுக்கு ஏற்புடையதாக இருக்காது. முதல் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டு சபை செய்தது போல ஒரு புதிய சபையானது அங்கத்தினர்கள் விசுவாசித்து தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும் போது ஒரு புதிய ஏற்பாட்டு சபை உண்மையான சபையாக இருக்கிறது.

மனுஷர் தேவனை ஆராதிக்கும் பொருட்டு மனுஷ உபதேசங்களுக்கும் மதப்பாரம் பரியங்களுக்கும் உட்பட்டு தங்களுடைய மத அனுஷ்டிப்புகளில் தவறான போதனைகளை கூட்டியிருக்கின்றபடியினால் நீங்கள் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர் களாயிருக்க வேண்டும். அவர்கள் தேவனுடைய திட்டத்திலிருந்து குறைத்தும் உள்ளனர். உலகமுழுவதும் தவறான போதனைகள் போதிக்கப்பட்டு வருகின்றன. ஆனபடியால் ஒருவன் நிச்சயமாக தவறான சபைகளைக் குறித்து எச்சரிக்கையாக இருந்து தேவனுடைய வசனத்தின் மூலமாக ஒவ்வொரு போதனையையும் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். வேதாகமம், "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ வென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்" (2 கொரி.13:5) எனக் கூறுகிறது. வேதாகமத்தினுடைய பின்வரும் எச்சரிப்பைக் கவனியுங்கள்.

"ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்" (1 தீமோ. 4:1)

"ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும்" (2 தீமோ.4:3,4)

ஜாக்கிரதையாயிருங்கள்! வஞ்சிக்கப்படாதிருங்கள்!! ஒவ்வொரு சபையும் கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென உரிமை பாராட்டுகிறது அல்லது ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு வேதாகமம் கூறுகிறதை அப்படியே பின்பற்றுவதே சரியானது எனக் கூறுகிறதே என்று ஒருவன் விசுவாசிப்பதற்கு யோசனை இல்லாதவனாக இருப்பான். உங்களுடைய சமுதாயத்தில் உண்மையான சபையை அடையாளங் கண்டு கொள்ளுங்கள். சபை நடைமுறைப்படுத்துகின்ற காரியங்கள் மற்றும் போதிக்கின்ற காரியங்கள் மூலம் உண்மையான சபையை அடையாளங்கண்டு கொள்ளுங்கள். நடைமுறைப்படுத்தப்படுவதும் போதிக்கப்படுவதும் புதிய ஏற்பாட்டின் படி இருக்க வேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையோடு கூட்டக் கூடாது என்பது மிகவும் முக்கியமானதாகும் (2 யோவா.9). நாம் வேறொரு சுவிசேஷத்தைப் போதிக்கவும் விசுவாசிக்கவும் கூடாததென்பது மிகவும் முக்கியமானதாகும் (கலா. 1:6-9). நீங்கள் உண்மையான கிறிஸ்துவின் சபையை கண்டுபிடிக்கும் பொருட்டு வேதவாக்கியங்களை நீங்கள் ஆராய வேண்டுமென்பதினால் இது உங்களோடுள்ள எங்களுடைய ஆலோசனையாயிருக்கிறது.

**தற்சோதனை :**

1.______ ஆணோ அல்லது பெண்ணோ தங்களுடைய சுய நம்பிக்கையைக் குறித்த காரியத்தில் ஒவ்வொரு விசுவாசியும் என்ன செய்ய வேண்டும்?
(A) சோதித்தறிய வேண்டும் (B) அதோடு திருப்தியாயிருக்க வேண்டும்
(C) சரியாகயிருக்க நினைக்க வேண்டும்.

2.______ பிற்காலங்களில் சிலர் எதை விட்டு விலகுவார்கள் என ஆவியானவர் கூறுகின்றார்?
(A) மத சார்பான நடக்கையை விட்டு (B) விசுவாசத்தை விட்டு
(C) போதனையை விட்டு

3.______ சிலர் சத்தியத்தை விட்டு விலகி ______ க்கு சாய்ந்து போவார்கள்
(A) அரசியலுக்கு, (B) பரிசுத்த ஆவிக்கு (C) கட்டுக்கதைகளுக்கு

ஆம்/இல்லை : நீங்கள் உங்களுடைய சமுதாயத்தில் உண்மையான கிறிஸ்துவின் சபையைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால், உங்களுடைய வீட்டில் ஒரு சபையை ஆரம்பிக்க விரும்புகிறீர்களா?

வேதவாசிப்பு : அப். 20:28-30; 2 பேதுரு.2:20-22

வேதஆராய்ச்சி : விசுவாசம் : கலா. 3:1-5; 1 தீமோ.4:1-3; 2 தீமோ.2:18 ; 4:4,10; எபி.6:4-6; 10:26-31; வெளி.2:4, வஞ்சகம் : சங்.43:1; 55:23; மத்.24:11,24 ; 1கொரி.3:18; 2 கொரி.4:2;11:13;எபே.4:14; 5:6; கொலோ.2:8; 2தீமோ.3:13.

## நினைவில் கொள் !

சபைக்குத் தலைவர் ஒருவரே, அவர் இயேசுகிறிஸ்து.

ஒரே சபை, அது கிறிஸ்துவின் சரீரம்.

சபையின் ஆரம்ப இடம் ஒன்றே, அது எருசலேமில் இருந்ததே.

ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் மூப்பர்கள் பலர்.

சபை வேதாகமத்தின் பெயரில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

கிறிஸ்தவர்கள் வேதாகம நாமங்களோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் தேவனை அநுதினமும் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் தேவனை தங்கள் வாயினால் துதிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் உற்சாக இருதயத்தோடு கொடுக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் இடைவிடாமல் பங்கு பெற வேண்டும்.

கிறிஸ்தவர்கள் இடைவிடாமல் வேதம் வாசிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் இடைவிடாமல் சபையாக கூடிவர வேண்டும்.


கிறிஸ்தவர்கள் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்.

## ஜெபியுங்கள்

★ உலகத்தில் மனித நேயம் வளர...

★ இம்மாதம் நடைபெற இருக்கும் 10வது வாசகர் கருத்தரங்கிற்காக...

★ அமெரிக்கா மற்றும் ஈராக்கிடையே நடைபெற்று வரும் போர் முடிவுக்கு வர, பலியானவர்களுடைய குடும்பங்களுக்காக



## வேத அறிவுப் போட்டி எண் 31 ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. நாற்பது | - எண்.32:13 | 6. யோபு | - யோபு 27:6 |
| 2. கடிந்து கொள்ள | - லேவி.19:17 | 7. விழுவான் | - நீதி.28:18 |
| 3. சாமுவேல் | - 1 சாமு.7:12 | 8. புதிய மனுஷனைத் | - எபே. 4:24 |
| 4. அழியப்பண்ணுவார் | - 1 கொ.6:13 | 9. கிருபை, உப்பால் | - கொலோ.4:6 |
| 5. நீதிமான்களாக்குகிறவர் | - ரோ.8:33 | 10. பிழைப்புக்கடுத்த | - 2 தீமோ.2:4 |

# சந்திப்போம் - சிந்திப்போம்

உரையாடல் - 9 D. எபிநேசர்

*யோனத்தான் :* அந்தச் சோகக் கதையைக் கொஞ்சம் சொல்லுப்பா.

*தாவீது :* சோகக் கதையானாலும் அது கட்டுக்கதையில்லப்பா. உலகத் தோற்றத்தின் போது நடந்த உண்மைக்கதை. எல்லா உயிரினங்களையும் எல்லா பிரமாண்டமான படைப்புகளையும் படைச்ச நம் தேவன், மனிதனைப் படைக்கும்போது விசேஷ கவனம் எடுத்துக்கிட்டாரு. மனிதனை எப்படிப் படைக்கலாம்ங்கறதைப் பத்தி தன் தேவத்துவ சகாக்களோடு ஆலோசனை நடத்தினாரு. கடைசியில, தம்முடைய சாயலா படைக்கறதுன்னு தேவன் தீர்மானிச்சாரு.

*யோனத்தான் :* மனுஷனுக்கு மட்டும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கக் காரணம்?

*தாவீது :* அவன் மேல தேவன் வைத்த அன்புதான். அதுமட்டுமில்ல எல்லாப் படைப்புகள் மீதும் அவனுக்கு ஆளுகையைக் கொடுத்தாரு. எல்லா உயிரினங்களுக்கும் பேர் வைக்கக் கூடிய வி.ஐ.பி.யா ஆக்கினாரு. எல்லாத்துக்கும் மேல உலகத்தில் இருக்கும் மற்றப் படைப்புகள் மாதிரியெல்லாம் நம்மை படைக்காம, தம்முடைய சாயல்ல நம்மைப் படைக்கிறார்னா நம்ம மேல எவ்வளவு அன்பு வச்சிருக்காருன்னு பார்த்துக்கோ!

*யோனத்தான் :* உண்மைதான் தாவீது. ஆனா தேவனுக்குத்தான் உருவமே இல்லையே! அப்புறம் எப்படி அவரை மாதிரியே நம்மை உருவாக்கியிருக்க முடியும்?

*தாவீது :* தேவன் உருவமற்றவர் என்பது உண்மைதான். அவர் ஆவியா இருக்காரு. மனுஷன் சரீரத்துல போர்த்தப்பட்டிருந்தாலும் அவனை ஆவிக்குரியவனாகப் படைச்சிருக்காரு. வேற எந்த உயிரினமும் அப்படிப் படைக்கப்படல. அந்த ஆவிக்குரிய மனுஷன்தான் தேவசாயல்ல இருக்கான். தன் ஜீவ சுவாசத்தை அவனுக்குள்ளே ஊதி அவனை ஜீவாத்துமாவாக்கினாரு. அவருடைய, சாயல் அப்படீன்னா, அதாவது அவரைப்போல் பரிசுத்தமா, பாவம்னா என்னென்னே தெரியாத அளவுக்கு, தீமையே தெரியாம நன்மை மட்டுமே செய்யக் கூடியவனா, உயர்ந்த நற்பண்புகளோட, தன்னைப் போலவே அவனுடைய ஆத்துமா என்றைக்கும் உயிரோடிருக்கும்படி படைச்சாரு.

*யோனத்தான் :* அடேங்கப்பா! எவ்வளவு சிறப்பா படைச்சிருக்காரு!

*தாவீது :* ஆவிக்குரிய காரியங்கள்ல மட்டுமில்லே, சரீரத்திலும் அவனை பிரமிக்கத்தக்க அதிசயமா படைச்சு, பராமரிச்சாரு.

*யோனத்தான் :* அப்படியா அது என்ன?

*தாவீது :* அதை அடுத்த முறை சொல்றேன். இப்பப் போலாமா? *Bye...*

# கீழ்ப்படிதல்

P.R. சாமி



"குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு தாம் பூரணரான பின்பு தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் நித்திய ரட்சிப்பை அடைவதற்கு காரணராகி" என்று இயேசுவைக் குறித்து எபிரேயருக்கு எழுதிய ஆசிரியர் குறிப்பிடுகிறார் (எபி.5:8-9).

கிறிஸ்துவுக்குள்ளான சகல ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள தேவன் நம்மிடத்தில் எதிர் பார்ப்பது கீழ்ப்படிதல். கீழ்ப்படிதலுக்கு கிறிஸ்துவே மாதிரியாக திகழ்கிறார். பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் இதை பவுல் குறிப்பிடும்போது "அவர் மனுஷரூபமாய் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார்". கீழ்ப்படிதலை தேவன் நம்மிடத்திலே எதிர்பார்க்கிறார். அது மாத்திரமல்ல, கிறிஸ்துவும் அதற்கு தம்மையே மாதிரியாக ஒப்பு கொடுத்தார். ஆகையினால் தேவனுடைய பிள்ளை ஒவ்வொருவனும் அவருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டியது அவசியம். கீழ்ப்படிதல் அவசியமா என்று இன்று மத வட்டாரங்களில் கேட்கிறார்கள். வார்த்தைகளினால் அவ்விதம் கூறா விட்டாலும், கிரியைகளில் அவ்விதம் கேட்காமல் கேட்கிறார்கள். அவர்கள் கூறும் கூற்று ஒருவன் நல்ல மனோபாவத்தைக் காட்டி, உணர்ச்சியோடு எந்த காரியத்திலும் செயல்பட்டால் போதுமானது என்பர். ஆனால் வேதாகமத்தில் கீழ்ப்படிதல் வலியுறுத்தப்பட்டு இருப்பதை நாம் கண் கூடாக பார்க்க முடியும். உதாரணமாக, இயேசு கூறினார், "பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்.7:21). "என்னை ஆண்டவரே என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன? (லூக்.6:46). கீழ்ப்படிதல் என்பது வெறும் வாய்ப் பேச்சும், உணர்ச்சியும் அல்ல. செயலில் காட்ட வேண்டிய ஒன்று என்பதைத்தான் இயேசு இங்கு வலியுறுத்தி இருக்கிறார். மேலும் தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்" (2 தெச.1:7-8).

"சகல ஜாதிகளும் விசுவாசத்திற்கு கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கின்ற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷம்" என்று பவுல் குறிப்பிடுகிறார் (ரோம.16:26). தன் சொந்த சகோதரர்கள் அதாவது இஸ்ரவேலர்களுக்கு வைராக்கியம்

இருந்தும் அவர்களின் இரட்சிக்கப்படாத நிலையை குறிப்பிட்டு (ரோம.10:1-3) பின்பு 16-ம் வசனத்தில் "அவர்கள் எல்லோரும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவில்லை என்றார் பவுல்".

தேவன் எந்த அளவுக்கு கீழ்ப்படிதலை வலியுறுத்துகிறார் என்பதற்கு இதுவரை கொடுத்த வசனங்கள் போதுமானவை. தேவனுடைய ஆசீர்வாதங்கள் நிபந்தனைக் குட்பட்டது. பவுல் கூறுகிறார். "தேவனுடைய அந்த ஞானமானது சபை மூலமாய் தெரியவரும் பொருட்டாக" என்று. இயேசுவின், பிரதான கட்டளையில், மனிதன் கீழ்ப்படிய வேண்டிய கட்டளைகள் உள்ளன. "விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் ரட்சிக்கப்படுவான்" என்றார். கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூறுகிறவன், அவருடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். அதாவது கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். பழைய பாவங்களை விட்டு மனந்திரும்ப வேண்டும். கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை வாயினால் அறிக்கையிட வேண்டும். பின்பு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட வேண்டும். அப்பொழுது, கிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களையும் கழுவி, ஒருவனை ரட்சிக்கும். ரட்சிக்கப்படுகிறவனை கர்த்தர் சபையில் சேர்க்கிறார். அதன் பின்னர் மரணபரியந்தம் உண்மையாயிருந்தால், ஜீவ கிரீடத்தைப் பெறுவான்.

ஆனால் இன்று மனிதன் கீழ்ப்படிதலுக்குப் பதில் விசுவாசம் ஒன்றே போதும் என்று பேசுகிறான். இவர்கள் கீழ்ப்படிதலை வலியுறுத்துவது கிடையாது. ஆவிக்குரிய நல்ல மனப்பான்மை ஒருவனுக்கு இருந்தால் போதும் என்பர். யாக்கோபு கூறுகிறார், கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான் என்று, தேவனுடைய சில கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து விட்டு, சிலவற்றை விட்டு விட்டால் பூரண கீழ்ப்படிதல் ஆகாது.

இரண்டாவது, கீழ்ப்படிதலுக்குப் பதில் ஜெபத்தை செய்வதால் தேவனுடைய சித்தத்தை செயலாற்ற முடியாது. ஜெபம் ஒரு தேவனுடைய பிள்ளைக்கு கிடைத்த மாபெறும் சிலாக்கியம். ஜெபம் ஒரு கிறிஸ்தவனுக்கு முதுகெலும்பை போன்றது. ஆனால் கீழ்ப்படிதலுக்குப் பதில் ஜெபிப்பதால் பிரயோஜனமில்லை. எங்கெங்கு, எந்தெந்த கட்டத்தில் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டியதிருக்கிறதோ அங்கெல்லாம் கீழ்ப்படிந்தே ஆக வேண்டும். சிலர் இரட்சிப்பின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள். ஆராதனைக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் தவறாமல் கூடி வருவார்கள். கிறிஸ்தவ ஜீவியத்தின் மற்ற அம்சங்களில் கீழ்ப்படியாமல் ஊக்கமாக ஜெபித்தால் போதுமென்று விட்டு விடுவார்கள். இஸ்ரவேலர்களுக்கு கர்த்தர் கொடுத்த கட்டளையில், ஒன்றையும் கூட்டவும் வேண்டாம் குறைக்கவும் வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டார்கள் (உபா.4:2). நோவாவுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகள் வேறொருவராக இருந்தால் ஏதேனும் மாற்றியமைத்திருப்பார். ஆனால் நோவா கர்த்தர் இட்ட கட்டளையின்படியெல்லாம் செய்து முடித்தான் என்று வேதம் கூறுகிறது. இதுதான் பூரண கீழ்ப்படிதல் என்பது.

இந்த கீழ்ப்படிதல் தேவனுடைய பிள்ளைக்குக் கிடைத்த ஒரு சிலாக்கியம். தேவனிடத்தில் தான் கொண்டுள்ள விசுவாசம், மரியாதை, அன்பு இவற்றை நிரூபிக்கக் கிடைத்த வாய்ப்பு. உண்மையில் கீழ்ப்படிதலிலுள்ள சுபாவம் தவிர்க்க முடியாததொன்று.

தேவனுடைய கட்டளை என்று கண்டால் எந்தவித தயக்கமும் இல்லாமல் உடனடியாக கீழ்ப்படியக் கூடிய மனப்பான்மையை தேவன் பெரிதும் விரும்புகிறார். அதைத்தான் விசுவாசிகளின் தகப்பன் என்று பெயரெடுத்த ஆபிரகாம் தன் ஜீவியத்தில் வெளிப்படுத்தியிருக்கிறான். ஆகவே தான் தேவனுடைய சிநேகிதன் என்று எண்ணப்பட்டான்.

அன்புள்ள வானொலி நண்பனே, கிறிஸ்துவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து இருக்கிறாயா? அவருடைய சரீரமாகிய சபையில் அங்கமாயிருக்கிறாயா? இல்லாமலிருந்தால் உடனடியாக கீழ்ப்படிய உங்களை ஊக்குவிக்கிறோம். இதைக் குறித்த எந்த சந்தேகமானாலும் உடனே எங்களுக்கு எழுதுங்கள். நாம் பரலோகம் செல்ல கிறிஸ்துவை வாயினால் கர்த்தாவே என்று சொன்னால் மாத்திரம் போதாது. ஜெபித்தால் மாத்திரம் போதாது. எல்லா அம்சங்களிலும் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்தே ஆக வேண்டும்.

நாம் நினைக்கிறபடி கர்த்தருடைய கட்டளைகள் கீழ்ப்படிவதற்கு பாரமானவைகள் அல்ல. கிறிஸ்து கூறினார், "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்" என்று.

அன்புள்ள சகோதரனே, உனக்கு எப்படிப்பட்ட பிரச்சனை இருந்தாலும், நிலைமை எவ்வளவு மோசமாக இருந்தாலும், முதலில் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படி. மனிதனால் ஆகாத காரியம் அநேகம் உண்டு. ஆனால் தேவனாலே எல்லாம் கூடும். நாம் அவரை ஏற்றுக் கொண்ட பின்னர், அவரிடத்திலே உண்மையோடு இருந்தால், அவர் வாக்குத்தத்தப்படி, "தேவனில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கும்". அன்றியும் கிறிஸ்து கூறுவதை கேட்டாயா? "என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது நிலங்களையாது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நுறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்றார் (மாற்கு. 10:29-30) இன்னும் ஏன் தாமதம்? எழுந்து கர்த்தருடைய சித்தத்தைச் செய். அவர் உன்னை ஆசீர்வதிப்பார்".

- நன்றி

('சத்தியவழி' புத்தகத்திலிருந்து)

---

## எழுந்து கட்டுவோம் வாருங்கள்

நீலகிரி மாவட்டத்தில்

வாசகர்களுக்கான கருத்தரங்கு நடத்த உள்ளோம்.

விருப்பமுள்ள அம்மாவட்டத்து கிறிஸ்துவின் சபை ஊழியர்கள்

இவ்விதழ் ஆசிரியரோடு தொடர்பு கொள்ளவும்.

சிறுவர் பகுதி

# யெப்தாவின் பொருத்தனை

**வேத பகுதி : நியாயாதிபதிகள் 11:29–40**



யெப்தா என்ற ஒரு தேவ மனிதன் இஸ்ரவேல் மக்களை ஆறு வருஷம் நியாயம் விசாரித்து வந்தான். அவன் நியாயம் விசாரித்து வந்த நாட்களிலே அம்மோன்புத்திரர்களோடு யுத்த பண்ண சென்று கர்த்தருக்கு ஒரு பொருத்தனை பண்ணினான். என்ன பொருத்தனை என்று தெரியுமா? அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக் கொடுக்கவே ஒப்புக் கொடுத்தால் நான் சமாதானத்தோடே திரும்பி வரும்போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும், அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்று பொருத் தனை பண்ணினான். இஸ்ரவேலிலே பொருத் தனை செய்துவிட்டால் அதை மாற்ற மாட்டார் கள் அப்படியே செய்து நிறைவேற்றுவார்கள்.

பின்பு என்ன நடந்தது தெரியுமா? கர்த்தர் அந்தப்படியே அம்மோனியரை யெப்தாவின் கையில் ஒப்புக்கொடுத்தார். அவன் அவர்களை ஜெயித்து மிஸ்பாவிலிருக்கிற தன் வீட்டுக்கு வருகிறபோது அவன் குமாரத்தி தம்புரு வாசித்து நடனஞ்செய்து கொண்டு அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள். அவனோ அவளைக் கண்டவுடனே தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு: ஐயோ! என் மகளே, நான் கர்த்தரை நோக்கி இப்படி பொருத்தனை செய்து விட்டேனே அதை நான் மாற்றக் கூடாது என்று சொல்லி கலங்கினான். அதற்கு யெப்தாவின் மகள்: என் தகப்பனே நீர் சொன்னபடியே எனக்கு செய்யும் என்றாள். அந்தப்படியே யெப்தா செய்தான். அவள் புருஷனை அறியாதிருந்தாள்.

என்ன ஒப்புக்கொடுத்தல் பார்த்தீர்களா? அவன் செய்த பொருத்தனை அவனை கலங்கப் பண்ணினது. இருந்தபோதிலும் அவன் செய்த பொருத்தனையின் படியே அவளுக்குச் செய்தான். நம்முடைய குடும்பத்தார் பொருத்தனை செய்வார்கள். என் பிள்ளைக்கு மொட்டைபோடுகிறேன் என்று நாமும் அந்தப்படியே மொட்டை போட்டு கொள்வோம். இப்பொருத்தனையை தேவன் ஏற்றுக்கொள் வாரா? ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவே மாட்டார். அவர் (இயேசு) நமக்காக ஜீவனை கொடுத்தபடியால் நாமும் ஜீவனை கொடுக்கக்கடனாளிகளாக இருக்கிறோம். அப்படி

என்றால் ஜீவனை கொடுக்க வேண்டும் என்பதல்ல, அவருக்கு ஊழியம் செய்வதன் மூலம் அப்பணியை நிறை வேற்றுகிறோம். அவருக்கு நம்மையே பொருத் தனையாக அர்ப்பணிப்போம்.

## மனப்பாட வசனம்

"நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக் கொண்டால், அதைச் செலுத்த தாமதியாதே; அவர் மூடரில்பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்து கொண்டதைச் செய்" (பிரசங்கி 5:4)

## கிறிஸ்தவத்தை எப்படி வெளிப்படுத்துவது

## How to Express Christianity

| | |
|---|---|
| வீட்டில் | - அன்பினால் மற்றும் தன்னலமற்ற தன்மையினால் |
| வியாபாரத்தில் | - நேர்மையினால் மற்றும் உழைப்பினால் |
| சமுதாயத்தில் | - பரிசுத்தத்தினால், நற்பண்பினால் மற்றும் தாழ்மையினால் |
| தரித்திரமுள்ளவனுக்கு முன் | - தயவினால் மற்றும் இரக்கத்தினால் |
| பலவீனனுக்கு முன் | - உதவுவதால் மற்றும் பொறுமையினால் |
| துன்மார்க்கனுக்கு முன் | - தீமையை வெல்லுவதினால் |
| தேவனுக்கு முன் | - பயபக்தியினால், நேசத்தினால் மற்றும் கீழ்ப்படிதலினால். |

## வேத அறிவுப்போட்டி எண் 31 ல் வெற்றிபெற்றவர்கள்

1. S. எஸ்தர் மெர்சி - வத்தலக்குண்டு
2. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
3. S. செல்லமணி ஆறுமுகம் - Y.ஒத்தக்கடை
4. Mrs. லலிதா பிரேமகுமாரி - மதுரை
5. J.S. நிர்மலாஜான் - மதுரை
6. A. மேரியம்மாள் - மதுரை
7. A. தங்கமுத்து - பொங்கலூர்
8. A. ஜோதிகாந்தம் - பாண்டிநல்லூர்
9. S. ஆனந்தராஜ் - ஈரோடு
10. M. சௌதண்யா - பண்ணைப்புரம்
11. Ira. எதிராசன் - சங்ககிரி
12. V. சரவணகுமார் - கோவை
13. Mrs. வனிதா சாமுவேல் - காமலாபுரம்
14. K. சாந்தி - M. வாடிப்பட்டி
15. Mrs. கிரேஸ்லூயிஸ் - நிலக்கோட்டை
16. S.R. பெரியசாமி - சேலூர்
17. R. சுவாதிரவி - ஈரோடு
18. R. பிளசன் - செட்டிபாளையம்
19. D.S. - செட்டிபாளையம்
20. குளோரிபவுல்சர் - சென்னை
21. M. ரோஸ்மேரி - சென்னை
22. V. கோவலன் - மதுரை
23. P.M. சத்தியவாசகன் - கோவை
24. L. மனாசேமண்ணு - சித்தூர் (A.P.)
25. N. கஸ்தூரி கிறிஸ்டி - திருவண்ணாமலை
26. M. சாலமோன் - பெங்களூர்
27. S. வைலட்சுந்தர்சிங் - வாடிப்பட்டி
28. S. தண்டபாணி - சிலுவத்தூர்
29. Sis. ஜெயந்தி நோயல் - சேலம்
30. R. சண்முகம் - வேலம்பாளையம்
31. R. ஜெயாரூபி - சேலம்

### போட்டியாளர்கள் கவனத்திற்கு

- உங்கள் பதில் அஞ்சல் அட்டையில் தெளிவாக எழுதி அனுப்பப் பட வேண்டும்.
- உங்கள் பெயர் மற்றும் முகவரி, பதில் அனைத்தும் தமிழில் எழுதப்பட வேண்டும்.

**உங்கள் கவனத்திற்கு**

இவ்விதழ் தேவைப்படுவோர் இன்றே ஒரு போஸ்ட் கார்டில் உங்கள் பெயர் மற்றும் உங்கள் நிரந்தர முகவரியை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி அனுப்பி வைக்கவும். ஒரு குடும்பத்திற்கு ஒரு இதழ் மட்டுமே அனுப்ப இயலும். ஏற்கனவே இவ்விதழை பெற்றுவருகிறவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய Ref. No. எழுதி தொடர்பு கொள்ளவும். நன்றி. - ஆசிரியர்

| பிரசங்கி | பழைய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | ECCLESIASTES |
|---|---|---|

| | | |
|---|---|---|
| பொருள் | : | தேவனுக்குப் புறம்பான வாழ்க்கையின் மாயைகளைக் குறித்த பிரசங்கங்கள் |
| ஆக்கியோன் | : | சாலொமோன் |
| காலம் | : | ஏறக்குறைய 971 - 931 கி.மு. |
| திட்டவரைக் குறிப்பு | : | ஞானம்,இன்பம்,செல்வம்,வேலை மாயையைத் தருகிறது. (1-2)<br>தற்போதைய மகிழ்ச்சியே வழி. (3)<br>தேவனுக்கு பயந்து நம்பிக்கையுடன் இருப்பதை தவிர வேறொன்றும் இல்லை.(4)<br>செல்வம் ஒருவனை தூங்கவொட்டாது. (5)<br>ஸ்தீரிகள் தவறான பாதைக்கு வழிநடத்துகின்றனர். (6-7)<br>அரசுக்கு கீழ்ப்படிவது அவசியம். (8)<br>மரணம் அனைவருக்கும் சம்பவிக்கிறது (9-10)<br>எல்லாம் மாயையே தேவனுக்குப் பயந்து கீழ்ப்படிவதே காரியத்தின் கடைத்தொகை(11-12) |

## சிறப்புச் செய்தி :

"காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; " எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே".

## வரலாற்று பின்னணி :

பிரசங்கி நாம் வாழும் உலகத்தை தேவனுடைய வார்த்தை எவ்வளவு உண்மையாய் வெளிப்படுத்துகிறது என்பதை நமக்குக் காட்டுகிறது. ராஜாவாகிய சாலொமோனின் சுய வாழ்க்கையிலிருந்த மாயையின் மூலம், மற்றவர்கள் கற்றுக்கொள்ளும் வகையில், அவனுடைய மரணத்திற்கு முன்பாக அவை எழுதப்பட்டன.

*இந்தியாவில் 1,650 மொழிகள் பேசப்பட்டு வருகிறது. இதில் 176 மொழிகளில் மட்டும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.*

## வேத அறிவுப் போட்டி எண். 32

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

Ref.No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.

1. பாகால் பேரீத்தின் கோவிலிலிருந்து எழுபது வெள்ளிக்காசை எவனுக்குக் கொடுத்தார்கள்?
2. மோசே என்னை அனுப்புகிற நாளில், எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள் வரைக்கும் எனக்கு இருக்கிறது என்று எண்பத்தைந்து வயதில் சொல்லியவன் யார்?
3. பிதாவானவர் குமாரனை உலக ரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம் என்று எழுதிய அப்போஸ்தலன் யார்?
4. அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள், இப்படிப்பட்ட பலிகளின்மேல் யார் பிரியமாயிருக்கிறார்?
5. நாம் மரிப்பது நிச்சயம், திரும்பச் சேர்க்கக் கூடாதபடிக்கு, தரையிலே சுவறுகிற தண்ணீரைப்போல் இருக்கிறோம் என்று ராஜாவைப் பார்த்து சொன்ன பெண் யார்?
6. தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி, யாருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது?
7. புழுவாயிருக்கிற மனிதனும், பூச்சியாயிருக்கிற மனுபுத்திரனும் எம்மாத்திரம் என்றவன் யார்?
8. உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள் என்று எழுதிய அப்போஸ்தலன் யார்?
9. யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் எப்படிப்பட்டவராய் இருக்கிறார்?
10. வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன் என்பவன் யார்?

## நடப்புச் செய்திகள்

★ ஈராக் மீது அமெரிக்கா நடத்தும் போர் இஸ்லாமிற்கு எதிரானது அல்ல. சதாம் ஆட்சியை அகற்றவே நடக்கிறது என சவுதி அரேபியாவிற்கான அமெரிக்கதூதர் தெரிவித்துள்ளார்.

★ சீனாவின் புதிய அதிபராக ஹு ஜிண்டா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

★ உலகம் முழுவதும் பரவிவரும் நிமோனியா நோய்க்கு (சார்ஸ்) உலக சுகாதார அமைப்பின் டாக்டர் கார்லோ உர்பானி பலியாகியுள்ளார்.

★ இரண்டு ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு சென்னை உயர்நீதிமன்றத்துக்கு எட்டு நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.


★ இந்திய கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் பயணம் இம்மாதம் 8ம் தேதி துவங்கி, மே 15ம் தேதி வரை நடப்பதாக இருந்தது. இந்தப் பயணத்தை இந்தியா ரத்து செய்து விட்டது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th March 2003.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 a.m 7.00 a.m | Box. 3815 New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon Wed,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80 Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue, Wed, Thu, Fri | 5.30 p.m 5.45 p.m | Box. 8405 Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Box. 5540 Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine** **FOR FREE DISTRIBUTION ONLY**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.

E-mail : batlagunduchurchofchrist@rediffmail.com